compose.kerala.gov.in
egazette.kerala.gov.in
printing.kerala.gov.in

Regn.No. KERBIL/2012/45073
dated 2012-09-05 with RNI
Reg No.KL/TV(N)/634/2021-2023

കേരള സർക്കാർ

GOVERNMENT OF KERALA

# കേരള ഗസറ്റ്

# KERALA GAZETTE

ആധികാരികമായി പ്രസിദ്ധപ്പെടുത്തുന്നത്

PUBLISHED BY AUTHORITY

ചൊവ്വ, 2022 ഫെബ്രുവരി 08

**Tuesday, 08th February 2022**

1197 മകരം 25

**25th Makaram 1197**

1943 മാഘം 19

**19th Magha 1943**

വാല്യം 11

**Vol. XI**

നമ്പർ / **No.** **6**

## Part I -Section (iii)

## Law Department

©
കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA
2022

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-எ) துறை

அறிக்கை

எண் 26923/ச. இ. எ. 1/2018/சட்டம்.

2018 டிசம்பர் 21

திருவனந்தபுரம், 1193 தனு 6

1940 அக்ரஹாயணம் 30.

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டபேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2018 டிசம்பர் 21-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் சட்டம் எண் 35

**2018-ன் கேரள நிதி ஒதுக்கீடு (4-வது எண்) சட்டம்**

2018-2019-வது நிதி ஆண்டின் பணிகளுக்காக கேரள மாநில தொகுநிதியிலிருந்து மேலும் சில தொகைகளை வழங்குவதற்கும் வினியோகம் செய்வதற்கும் அதிகாரப்படுத்துதற்கான ஒரு சட்டம்.

முன்னுரை.—2018-2019-ம் நிதியாண்டின் பணிகளுக்காக கேரள மாநில தொகுநிதியிலிருந்து மேலும் சில தொகைகளை வழங்குவதற்கும் வினியோகம் செய்வதற்கும் அதிகாரப்படுத்துவது தேவையாக இருப்பதால்;

1. சுருக்கப்பெயர்.—இந்தச்சட்டம் 2018-ன் கேரள நிதி ஒதுக்கீடு (4-வது எண்) சட்டம் என அழைக்கப்படலாம்.

2. 2018-2019-ம் நிதி ஆண்டிற்கு கேரள மாநில தொகுநிதியிலிருந்து 3509,22,71,000 ரூபாய் வழங்கல். 2018-2019-வது நிதி ஆண்டில் ஏற்படும் பல்வேறு தேவைகளை எதிர்கொள்வதற்கு அட்டவணையின் (2)-வது கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் தேவைகள் சம்மந்தமாக அட்டவணையின் (3)-வது கட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கு மிகாததும் மொத்தம் மூவாயிரத்தி ஐந்நூற்றி ஒன்பது கோடி இருபத்தி இரண்டு லட்சத்தி எழுபத்தி ஒன்றாயிரம் ரூபாய் மட்டும் வருவதுமான தொகைகள் கேரள மாநில தொகுநிதியிலிருந்து வழங்கவும் வினியோகிக்கவும் செய்யலாம்.

3. நிதி வினியோகம்.—இந்த சட்டத்தின்அடிப்படையில் கேரள மாநில தொகுநிதியிலிருந்து வழங்கவும் வினியோகிக்கவும் செய்வதற்கு அதிகாரப்படுத்தப்பட்டுள்ள தொகைகள் 2018-2019-ன் நிதி ஆண்டு தொடர்பாக அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகள் மற்றும் தேவைகளுக்குமாக வினியோகிக்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

**அட்டவணை**

(பிரிவுகள் 2 மற்றும் 3 பார்க்கவும்)

| (1) | | (2) | | (3) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மிக கூடாத தொகைகள் | | |
| *வரிசை எண்* | *தேவை எண்* | *பணிகளும் தேவைகளும்* | | *சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (ரூபாய்)* | *தொகுநிதியில் கட்டணம் சுமத்தப்பட்டது (ரூபாய்)* | *மொத்தம் (ரூபாய்)* |
| 1 | I | மாநில சட்டப்பேரவை | வருவாய் | 1,000 | .. | 1,000 |
| 2 | III | நீதி நிர்வாகம் | வருவாய் | 2,000 | .. | 2,000 |
| 3 | VIII | ஆயத்துறை | வருவாய் | 1,000 | .. | 1,000 |
| 4 | | கடன்பொறுப்புகள் | வருவாய் | .. | *19,17,00,000* | 19,17,00,000 |
| 5 | XI | மாவட்ட ஆட்சியும் பலவகையும் | வருவாய் | 40,00,01,000 | .. | 40,00,01,000 |
| 6 | XII | காவல் | வருவாய் | 23,04,26,000 | *10,00,000* | 23,14,26,000 |
| 7 | XIII | சிறைகள் | வருவாய் | 1,77,00,000 | .. | 1,77,00,000 |
| 8 | XIV | எழுதுபொருட்கள், அச்சடி மற்றும் நிர்வாகப் பணிகள் | வருவாய் | 1,000 | .. | 1000 |
| 9 | XV | பொதுப்பணி | வருவாய் | 99,52,000 | .. | 99,52,000 |
| | | | மூலதனம் | 2,000 | .. | 2,000 |
| 10 | XVI | ஓய்வூதியம் மற்றும் பலவகையும் | வருவாய் | 1528,27,98,000 | .. | 1528,27,98,000 |
| 11 | XVII | கல்வி, விளையாட்டு, | வருவாய் | 4,02,77,000 | .. | 4,02,77,000 |
| | | கலை மற்றும் கலாச்சாரம் | மூலதனம் | 1,000 | *7,50,30,000* | *7,50,31,000* |
| 12 | XVIII | மருத்துவ உதவி | வருவாய் | 15,00,03,000 | .. | 15,00,03,000 |
| | | மற்றும் பொதுமக்கள் சுகாதாரம் | மூலதனம் | 2,000 | .. | 2,000 |
| 13 | XXII | நகரமேம்பாடு | வருவாய் | .. | 1,83,000 | 1,83,000 |
| | | | மூலதனம் | 11,04,30,000 | 61,93,77,000 | 72,98,07,000 |
| 14 | XXIV | தொழில் மற்றும் தொழிலாளர் நலம் அயல்நாட்டுவாழ் மலையாளிகள் நலமும் | வருவாய் | 1,000 | 2,79,00,000 | 2,79,01,000 |
| 15 | XXV | அட்டவணைஜாதி/ பழங்குடியினர், பிற பிற்பட்டோர்/ சிறுபான்மையோர் பிரிவுகளின் நலன் உட்பட்ட சமூக நலன் | வருவாய் | 1,000 | .. | 1,000 |

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

| (1) | | (2) | | (3) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மிக கூடாத தொகைகள் | | |
| வரிசை எண் | தேவை எண் | பணிகளும் தேவைகளும் | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (ரூபாய்) | தொகுநிதியில் கட்டணம் சுமத்தப்பட்டது (ரூபாய்) | மொத்தம் (ரூபாய்) |
| 16 | XXVI | இயற்கை சீற்ற மீட்பு நடவடிக்கை | வருவாய் | 600,00,00,000 | .. | 600,00,00,000 |
| 17 | XXVII | கூட்டுறவு | வருவாய் | 6,57,000 | .. | 6,57,000 |
| | | | மூலதனம் | 17,00,00,000 | .. | 17,00,00,000 |
| 18 | XXVIII | பலவகை பொருளாதார பணிகள் | வருவாய் | 3,000 | .. | 3,000 |
| | | | மூலதனம் | 3,000 | .. | 3,000 |
| 19 | XXX | உணவு | வருவாய் | 155,00,00,000 | .. | 155,00,00,000 |
| 20 | XXXIII | மீன்பிடிப்பு | வருவாய் | 18,26,83,000 | .. | 18,26,83,000 |
| | | | மூலதனம் | 2,30,50,000 | .. | 2,30,50,000 |
| 21 | XXXV | பஞ்சாயத்து | வருவாய் | 10,00,01,000 | .. | 10,00,01,000 |
| | | | மூலதனம் | 75,00,00,000 | .. | 75,00,00,000 |
| 22 | XXXVI | கிராம மேம்பாடு | மூலதனம் | 24,61,000 | .. | 24,61,000 |
| 23 | XXXVII | தொழிற்சாலைகள் | வருவாய் | 1,000 | .. | 1,000 |
| | | | மூலதனம் | 1,000 | .. | 1,000 |
| 24 | XL | துறைமுகங்கள் | மூலதனம் | 73,69,14,000 | .. | 73,69,14,000 |
| 25 | XLI | போக்குவரத்து | வருவாய் | 1,000 | .. | 1,000 |
| | | | மூலதனம் | 531,11,32,000 | *98,50,000* | 532,09,82,000 |
| 26 | XLII | சுற்றுலா | வருவாய் | 1,000 | .. | 1,000 |
| 27 | XLV | பலவகை கடன் மற்றும் முன்னீடு | மூலதனம் | 209,87,22,000 | .. | 209,87,22,000 |
| 28 | XLVI | சமூக பாதுகாப்பு மற்றும் நலன் | வருவாய் | 2,000 | .. | 2,000 |
| | | | மூலதனம் | 100,00,00,000 | .. | 100,00,00,000 |
| | | | மொத்தம் | 3416,72,31,000 | *92,50,40,000* | 3509,22,71,000 |

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-பி) துறை

அறிக்கை

எண் 23950/ச. இ. பி. 2/2017/சட்டம்.

2018 செப்டம்பர் 7
திருவனந்தபுரம், 1194 சிங்ஙம் 22
1940 பத்ரா 16.

2018 செப்டம்பர் மாதம் 7-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச்சட்டம் பொதுமக்களின் தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்டத்துறை செயலாளர்.*

2018-ன் அவசரச்சட்டம் எண் 44

**2018-ன் கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள சேவைகள் தொடர்பான அதிக பொறுப்புகள்) அவசரச்சட்டம்**

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாம் ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

வக்கஃப் வாரியத்தின் கீழுள்ள நிர்வாக சேவைகள் தொடர்பான பொறுப்புகளை செயல்படுத்த கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அதிகாரமளிக்கும் ஒரு அவசரச்சட்டம்.

முகவுரை.—2017-ன் கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள சேவைகள் தொடர்பான அதிக பொறுப்புகள்) அவசரச்சட்டம் (2017-ன் 29) 2017-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் தேதி கேரளா ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டிருப்பதாலும்;

2018-ன் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி ஆரம்பித்து 2018 பிப்ரவரி மாதம் 7-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதாவை தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிலைநாட்டுவதற்காக 2018-ன் கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் (வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள சேவைகள் தொடர்பான அதிக பொறுப்புகள்) அவசரச்சட்டம் (2018-ன் 11-ம் எண்) 2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி கேரளா ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்ததாலும்;

2018-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி ஆரம்பித்து 2018 ஏப்ரல் மாதம் 4-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக ஒரு மசோதாவை மாநில சட்டப்பேரவையில் தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் விதிமுறைகளை நிலைநிறுத்துவதற்காக 2018-ன் கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் (வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள சேவைகள் தொடர்பான அதிக பொறுப்புகள்) அவசரச்சட்டம் (2018-ன் 29) 2018 ஏப்ரல் 7-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டதாலும்;

2018 ஜுன் மாதம் 4-ம் தேதி தொடங்கி 2018 ஜுன் மாதம் 25-ம் தேதி முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையில் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்திற்கு பதிலாக ஒரு மசோதாவை தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2

மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின் நிபந்தனைகளை நிலைநாட்டுவதற்காக 2018-ன் கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் (வஹஃப் வாரியத்தின் கீழுள்ள நிர்வாகப் பணிகள் தொடர்பான அதிக பொறுப்புகள்) அவசரச்சட்டம் (2018-ன் 39), 2018 ஜூலை 6-ம் தேதி கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டிருந்தபோதிலும்;

மேற்கூறிய அவசரச்சட்டத்திற்கு பதிலாக மாநில சட்டப்பேரவையில் ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்குரிய ஒரு மசோதா 2018 ஆகஸ்ட் 30-ம் தேதி ஆரம்பித்து அதே நாளில் முடிவடைந்த கேரள மாநில சட்டப்பேரவையின் கூட்டத்தொடரில் தாக்கல் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போனதாலும்;

இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (2)-ல் துணைப்பிரிவு (எ)-ன் கீழுள்ள அவசரச்சட்டம் 2018 அக்டோபர் மாதம் 11-ம் தேதி அமலில் இருந்து நின்று விடுவதாலும்;

மேற்கூறிய அவசரச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிலைநிறுத்தாவிடில் இடர்பாடுகள் ஏற்படும் என்பதாலும்;

கேரள மாநில சட்டசபை கூட்டத்தொடரில் இல்லாததாலும், தாம் அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளதாக மாநில ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

தற்போது, அதனால், இந்திய அரசியலமைப்பின் 213-வது விதித்தொகுப்பின் உட்பிரிவு (1)-ன் படி வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கேரள ஆளுநரால் பின்வரும் அவசரச்சட்டம் விளம்பர அறிக்கை செய்யப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச்சட்டம் 2018-ன் கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள சேவைகள் தொடர்பான அதிக பொறுப்புகள்) அவசரச்சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) அரசு, அரசிதழில் அறிக்கையில் வெளியிடும் தேதியில் இது அமலுக்கு வருவதாகும்.

2. விளக்கம்.—இந்த அவசரச்சட்டத்தில், சந்தர்ப்பம் மாறாக தேவைப்படாத பட்சத்தில்,-

(எ) ''அரசாங்கம்'' என்றால் கேரள அரசு என்று பொருள்படும்;

(பி) ''பப்ளிக் சர்வீஸ் கமிஷன்'' என்றால் ''கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷன்'' என்று பொருள்படும்;

(சி) ''சேவைகள்'' என்றால் வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள சேவைகள் என்று பொருள்படும்;

(டி) ''வக்கஃப் வாரியம்'' என்றால் 1995-ன் வக்கஃப் சட்டத்தின் (1995-ன் 43-வது மத்திய சட்டம்) பிரிவு 13-ன் துணைப்பிரிவு (1)-ன் படி நிறுவப்பட்ட கேரளா வக்கஃப் வாரியம் என்று பொருள்படும்;

3. வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள நிர்வாக சேவைகள் தொடர்பான பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் பொறுப்புகள்.—(1) வக்கஃப் வாரியத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பணியமர்வு மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பாக எந்த ஒரு சட்டத்தில், விதிகளில் அல்லது ஒழுங்குமுறைகளில் என்னதான் கூறப்பட்டிருந்தாலும்; வக்கஃப் வாரியத்தின் நிர்வாக சேவைகளுக்காக அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை நேரடியான பணியமர்வு வாயிலாக நியமனம் செய்யும்போது இஸ்லாம் மதத்தினை சார்ந்தவர்களின் ஒரு தேர்வு செய்யப்பட்ட பட்டியலை தயார் செய்வது என்பது பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் கடமை ஆகும்.

(2) வக்கஃப் வாரியம், பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன், கலந்தாலோசிக்கலாம்,-

(எ) வக்கஃப் வாரியத்தின் நிர்வாக சேவைகளின் கீழ் உள்ள பதவிகள் தொடர்பான காரியங்களுக்கான நேரடி தேர்வு;

(பி) வக்கஃப் வாரியத்தின் கீழ் உள்ள நிர்வாக சேவைகளில் உள்ள பதவிகளுக்கான நேரடி தேர்வுக்கான நியமனங்கள் தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய கொள்கைகள் மற்றும் அத்தகைய நியமனங்களுக்குப் பொருத்தமான பணிக்கு முயற்சிப்போர் மற்றும் அவர்களை நாடி வரும் எந்த ஒரு காரியத்திலும் ஆலோசனை வழங்குதல் என்பது பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் கடமையாகும்;

எனினும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன் கலந்தாலோசிக்கத் தேவையில்லை என்னும் நிபந்தனைகயில், பொதுவாக அல்லது குறிப்பிட்ட விஷயத்தில் அல்லது விஷயங்களில் அல்லது ஏதேனும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் விஷயத்தை எடுத்துக்கூறிக்கொண்டு அரசுக்கு விதிமுறைகளை இயக்கலாம்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

3

(3) பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கும் வக்கஃப் வாரியத்துக்குமிடையே ஏதேனும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும் வேளையில், இந்த விஷயத்தை வக்கஃப் வாரியம் அரசின் பார்வைக்கு வைத்தபின் மற்றும் அந்த விஷயத்தில் அரசு மேற்கொள்ளும் முடிவே இறுதியானதாகும்

எனினும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் ஆலோசனைக்கு எதிராக அரசு ஒரு முடிவெடுப்பதற்கு முன்னராக அந்த விஷயத்தை பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் பார்வைக்கு கொண்டு வரவேண்டும் என்னும் நிபந்தனையில்,-

4. <u>விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்.</u>—(1) அரசு, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மற்றும் வக்கஃப் வாரியத்துடன் கலந்தாலோசித்து, இந்த அவசரச்சட்டத்தின் தேவைகளுக்கான, விதிமுறைகளை இயற்றலாம்.

(2) குறிப்பாக, மேற்குறிப்பிட்ட அதிகாரத்திற்கு பாதிப்பு நேராத வகையில், அவ்வாறான விதிகளில்,-

(எ) வக்கஃப் வாரியம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன் கலந்து ஆலோசிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறை;

(பி) பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன் கலந்தாலோசிப்பதற்கு தேவையான அல்லது அதற்கு காரணமான ஏதேனும் ஒரு விஷயம்;

(3) இந்த அவசரச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட ஒவ்வொரு விதிமுறையும், அது இயற்றப்பட்ட உடனேயே, ஒரு கூட்டத்தொடர் அல்லது அடுத்தடுத்து வருகின்ற இரண்டு கூட்டத்தொடர்கள் உடைய மொத்தம் பதினான்கு நாட்கள் நடைபெறுகின்ற சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் உள்ளபோது, அதற்கு முன்னராகத் தாக்கல் செய்யப்படவேண்டும். மற்றும், அது தாக்கல் செய்யப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னராக அல்லது அதனைப் பின்தொடரும் அடுத்த கூட்டத்தொடரில், சட்டப்பேரவை அந்த விதிமுறையில் ஏதேனும் மாற்றங்கள் செய்தால் அல்லது அந்த விதிமுறையை இயற்ற வேண்டாம் என்று முடிவெடுத்தால், அதன்பிறகு அந்த விதிமுறைக்கு மாற்றியமைக்கப்பட்ட நிலையில் மட்டுமே நடைமுறையில் இருக்கும் அல்லது விஷயத்திற்கு தகுந்தாற் போல, அமலில் இருந்து நின்றுவிடும் எது எவ்வாறு இருப்பினும், அத்தகைய ஒரு மாற்றமோ அல்லது இரத்து செய்தலோ அந்த விதிமுறையின்கீழ் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் ஒன்றின் செயல் நிலைத்தன்மைக்கு தீங்கு விளைவிக்காத வண்ணம் இருக்கவேண்டும்.

5. <u>இரத்தாதலும், காப்பும்.</u>—(1) 2018-ன் கேரள பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (வக்கஃப் வாரியத்தின்கீழ் உள்ள சேவைகள் தொடர்பான அதிக பொறுப்புகள் அவசரச்சட்டம்) அவசரச்சட்டம் (2018-ன் 39) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் ஒரு காரியம், இந்த அவசரச்சட்டத்தின்கீழ், செய்ததாகவோ எடுக்கப்பட்டதாகவோ கருதப்படவேண்டும்.

பி. சதாசிவம்,
ஆளுநர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

**கேரள அரசு**

சட்ட (சட்டமியற்றல்-சி) துறை

அறிக்கை

எண் 19228/ச. இ. சி. 1/2018/சட்டம்.

2018 டிசம்பர் 20
திருவனந்தபுரம், 1194 தனு 5
1940 அக்ரஹயாணம் 29.

கேரள மாநில சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2018 டிசம்பர் 20-ம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

பி. ஜி. ஹரீந்திரநாத்,
*சட்ட செயலாளர்.*

2018-ன் சட்டம் எண் 32

**2018-ன் கேரளா முனிசிப்பாலிட்டி (மூன்றாவது திருத்த) சட்டம்**

1994-ன் கேரள முனிசிப்பாலிட்டி சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்குரிய ஒரு சட்டம்.

முன்னுரை.—1994-ன் கேரள முனிசிபாலிட்டி சட்டம் (1994-ன் 20) இதற்கு பின்வரும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதால்;

இந்தியக்குடியரசின் அறுபத்தி ஒன்பதாம் ஆண்டில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது.

1. சுருக்கப்பெயரும் தொடக்கம்.—(1) இந்த சட்டம் 2018-ன் கேரள முனிசிப்பாலிட்டி (மூன்றாவது திருத்த) சட்டம் என்று அழைக்கப்படலாம்.

(2) இது 2018 செப்டம்பர் 15-ம் தேதி அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டும்.

2. பிரிவு 326-ல் திருத்தம்.—1994-ன் கேரள முனிசிபாலிட்டி சட்டத்தில் (1994-ன் 20) இதற்கு பிறகு முதன்மை சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 326-ல் துணைப்பிரிவு (3)-ற்கு பிறகு பின்வரும் துணைப்பிரிவு சேர்க்கப்படவேண்டும். அதாவது,-

“(4) இந்த சட்டத்திலோ தற்போது நடைமுறையிலுள்ள பிற ஏதேனும் சட்டங்களிலோ என்னதான் அடங்கியிருந்தாலும், அரசுக்கு, பொது விருப்பப்படி அவ்வாறு செய்வது தேவையென்று கருதும்போது திட கழிவுகளையும் குப்பை கழிவுகளையும் அவ்வாறான பிற பொருட்களும் இரண்டோ அதற்கு அதிகமாகவோ உள்ளாட்சி நிறுவனங்களில் இருந்து நேரடியாகவோ அரசு அதிகாரப்படுத்திய முகமை வாயிலாகவோ சேகரிக்கவும் கொண்டு செல்லவும் விட்டுவிடுவதும் பதனிடவும் செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் அல்லது பிற விதத்தில் ஒழுங்குபடுத்துவதும் அல்லது திட கழிவுகளையும் குப்பை கழிவுகளையும் அவ்வாறான பிற பொருட்களும் சேகரிக்கவும் கொண்டு செல்லவும் விட்டுவிடுவதும் பதனிடவும் செய்வதற்கு பெருமளவில் செலவு வருகின்ற ஏதேனும் திட்டம் ஏற்றெடுக்கவும் செய்ய வேண்டியதாகும்.”

4. இரத்தாதலும் தவிர்த்தலும்.—(1) 2018-ன் கேரள முனிசிபாலிட்டி (மூன்றாவது திருத்த) அவசரச்சட்டம் (2018-ன் 49) இதனால் இரத்து செய்யப்பட்டுள்ளது.

(2) அவ்வாறு இரத்து செய்யப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின்கீழ் செய்த ஏதேனும் காரியமோ எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையோ, இந்த சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்ட முதன்மை சட்டத்தின்கீழ் செய்ததாகவோ எடுத்ததாகவோ கருதப்பட வேண்டியதாகும்.

PUBLISHED BY THE SUPERINTENDENT OF GOVERNMENT PRESSES
AT THE GOVERNMENT CENTRAL PRESS, THIRUVANANTHAPURAM, 2022

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

Digitally signed by Salim A
Date:2022.02.08 02:42:49 +05:30